

மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சரும் மருத்துவப் பல்கலைக்கழகத்தின் இணை வேந்தருமான மா. சுப்பிரமணியன் தமிழ் நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழகத்தின் 11 ஆவது புதிய துணைவேந்தராக டாக்டர் கே நாராயணசாமி அவர்களுக்கு நேற்று (01.06.2023) நியமன உத்தரவினை, பல்கலைக்கழக கலையரங்கில் நடைபெற்ற விழாவில் வழங்கினார். இந்நிகழ்வின் போது மக்கள் நல்வாழ்வுத் துறையின் அரசு முதன்மைச் செயலாளர் ககன் தீப் சிங் பேடி, பதிவாளர் டாக்டர். அஸ்வத் நாராயணன் மற்றும் இப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர்கள் டாக்டர் சாந்தாராம் டாக்டர் மேஜர் ராஜா டாக்டர் பிரம்மானந்தம், செனட் உறுப்பினர்கள் டாக்டர் எழிலன் நாகநாதன் எம்.எல்.ஏ, கே.கணபதி எம்.எல்.ஏ, மற்றும் ஆளுமைக் குழு உறுப்பினர்கள் உடனிருந்தனர்.

### திருவள்ளூர் மத்திய மாவட்டம் முழுவதும்

# முத்தமிழ் அறிஞர் கலைஞர் பிறந்தநாள் எழுச்சியுடன் கொண்டாட முடிவு!

## மாவட்டச் செயலாளர் ஆவடி சாமு. நாசர் எம்.எல்.ஏ. அறிக்கை!



திருவள்ளூர், ஜூன் 2-

திருவள்ளூர் மத்திய மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு. நாசர் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

நம்முடைய இதயங்களில் நீக்கமற நிறைந்திருக்கும் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 100-வது பிறந்த நாள்விழா மற்றும் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, ஜூன் 3ஆம் தேதி அன்று நமது மாவட்டம் முழுவதும் மாநகர பகுதி ஒன்றிய நகர பேரூர்களில் உள்ள அனைத்து கிளைகளிலும் கழக கொடி தோரணங்களைக் கட்டி, முத்தமிழறிஞர் கலைஞர் தலைவர் தளபதி ஆகியோர் புகழ்பரப்பும் பாடல்களையும், அவர்கள் உரையாற்றிய எழுச்சியான பேச்சுக்களையும் ஒலிபரப்பி, அந்தந்த கிளைகளில் உள்ள கழக முன்னோடிகளை வைத்து, கழகத்தின் இருவண்ணக் கொடியை ஏற்றி, இனிப்பு களை வழங்கி, திருவள்ளூர் மத்திய மாவட்டமே விழாக் கோலம் பூணு கின்ற வகையில் நம்முடைய ஒப்பற்றத் தலைவர் கலைஞர் அவர்களின் 100வது பிறந்தநாளை மிகவும் பிரம்மாண்டமான முறையில் எழுச்சியுடன் கொண்டாடுவது என திருவள்ளூர் மத்திய மாவட்டக் கழகம் ஒருமனதாக முடிவெடுக்கிறது.

நம்முடைய ஒப்பாரும் மிக்காரும் இலா, மறைந்தும் நம் நெஞ்சம் நிறைந்த அன்புத் தலைவர் முத்தமிழ றிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழவை முன்னிட்டு திருவள்ளூர்மத்திய மாவட்டத்தில் உள்ள முதியோர் இல்லம் கருணை இல்லம் பார்வையற்றோர் பள்ளி மாற்றுத் திறனாளிகள் தங்கும் இல்லம், மனநலம்குன்றியோர் தங்கும் விடுதி, தொழுநோயாளிகள் இல்லம் ஆகியவற்றில் தங்கியுள்ள ஆதரவற்றோர்கள் அனைவருக்கும் ஜூன் 3-ஆம் தேதி அன்று அறுசுவை உணவு வழங்குவது என்றும், அத்துடன் இரத்ததான முகாம் மருத்துவ முகாம் கண் சிகிச்சை முகாம் நடத்துதல், மரக்கன்று களைநடுதல், ஏழை எளியவர்களுக்கு வேட்டி சேலை வழங்குதல், ஏழை எளிய பள்ளி மாணவ மாணவியர்களுக்கு இலவச நோட்டுப் புத்தகங் களை வழங்குதல்

ஜூன் 3ஆம் தேதி பிறக்கும் குழந்தைகளுக்கும் தங்க மோதிரம் அணிவிப்பது உள்ளிட்ட மக்கள் நலத்திட்ட உதவிகளை சிறப்பான முறையில் மாநில மாவட்டக் கழக நிர்வாகிகள், மாநகர நகர, ஒன்றிய, செயலாளர்கள், பேரூர் கழக செயலாளர் கள், செயற்குழு, பொதுக் குழு உறுப்பினர்கள், கழக நிர்வாகிகள் மற்றும் இளைஞரணி, மாணவரணி, மகளிரணி இலக்கிய அணி, தொண்டரணி, வழக்கறிஞரணி, விவசாய அணி, வர்த்தகரணி, நெசவாளரணி, ஆதி திராவிடர் நலக்குழு, சிறுபான்மை நல உரிமைப்பிரிவு, மருத்துவரணி, பொறியாளரணி, விவசாயத் தொழிலாளரணி, மகளிர் தொண்டரணி, கலை, இலக்கியப் பகுத்தறிவு பேரவை மற்றும் தகவல் தொழில் நுட்ப அணி, சுற்றுச்சூழல் அணியினர், தொ.மு.ச. மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகள் அவரவர் பகுதியில் வழங்குவது என்று தமிழகத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு ஜூன் 3-ஆம் தேதி முதல் ஒரு ஆண்டு முழுவதும் பொதுக்கூட்டங்கள் மற்றும் கழக நலத்திட்ட உதவி வழங்க நிகழ்ச்சிகள் நடத்த வேண்டும் .

இவ்வாறு மாவட்ட கழகச் செயலாளர் ஆவடி சா.மு.நாசர் அறிக்கை வாயிலாக தெரிவித்துக் கொண்டார்.

### கலைஞர்நகர் தெற்கு பகுதியில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்தநாளை முன்னிட்டு

# 100 இடங்களில் கொடியேற்றி, அறுசுவை உணவு, இனிப்பு வழங்குதல்!

## பகுதி செயலாளர் கே.கண்ணன் அறிக்கை!

சென்னை,ஜூன்.2-

சென்னை தெற்கு மாவட்ட செயலாளர் அமைச்சர் மா.சுப்ரமணியன் ஆலோசனைபடி, கலைஞர்நகர் தெற்கு பகுதி செயற்குழு கூட்டம் 01.06.2023 மாலை 6 மணிக்கு, கலைஞர்நகர் தெற்குபகுதி அலுவலகத்தில் பகுதி அவைத் தலைவர் எஸ். உமாபதி தலைமையில், சிறப்பு அழைப்பாளர் கன்னிகை. ஸ்டாலின் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் பகுதி செயலாளர் கே. கண்ணன் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழாவை கொண்டாடும் விதமாக, பகுதிக்குட்பட்ட அனைத்து வடங்களிலும் 100 இடங்களில் கொடியேற்றி, பொதுமக்களுக்கு அறுசுவை உணவு, இனிப்பு வழங்கியும், மாவட்ட செயலாளர் அண்ணன் திரு மா_சுப்ரமணியன் அவர்கள் ஆலோசனைபடி வருடம் முழுவதும் நலதிட்ட உதவிகள், நிகழ்ச்சிகள் நடத்திடவும் முடிவு செய்யப்பட்டது.

இக்கூட்டத்தில் பகுதி நிர்வாகிகள் அஜந்தா எஸ். ரவி, கனிமொழி தனசேகரன், பெ. தியாகு, அ. பாபு, மாவட்ட தொண்டரணி அமைப்பாளர் ஆர். சசிகுமார், வட்ட செயலாளர்கள் இரா.செழியன், சோ. செந்தில்குமார், பூக்கடை ஆர். பழனிச்சாமி, பி. கே. குமார், மு. அன்பழகன், சதீஷ் கண்ணன், மாவட்ட பிரதிநிதிகள் நந்தகோபால், அய்யாவு பழனி இரா. சங்கர் ஆகியோர் கலந்து கொண்டனர்.

### சென்றார், வென்றார், வந்தார்!

# தொழில் அதிபர்களை சந்திப்பதற்கே பயண திட்டத்தை வகுத்த முதல்வர்!

## ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் பாராட்டு மழை!



தலையங்கம்
தினத்தந்தி
1.6.2023 (வியாழக்கிழமை)
சென்றார்; வென்றார்; வந்தார்!

சென்னை, ஜூன் 2 -

முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வெளிநாட்டு பயணம் குறித்து ‘தினத்தந்தி’ நாளேடு 1.6.2023 தேதிய நாளேட்டில் முதல்வர் சென்றார், வென்றார், வந்தார் என பெருமை பொங்கும் வகையில் அவரது பயண திட்டங்கள் குறித்து தலையங்கம் எழுதியுள்ளது.

அது வருமாறு:-

முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின் சிங்கப்பூர், ஜப்பான் நாடுகளுக்கு 9 நாட்கள் சுற்றுப்பயணமாக சென்றுவிட்டு நேற்றிரவு சென்னை திரும்பினார். இந்த இரு நாடுகளிலும் பார்க்க வேண்டிய இடங்கள் எவ்வளவோ இருக்கின்றன. ஆனால் அதையெல்லாம் பார்க்காமல், அங்குள்ள தொழில் அதிபர்களை சந்திப்பதற்கே தனது பயணத் திட்டத்தை வகுத்துக் கொண்டார்.

எந்தவொரு செய லுக்கும் ஒரு இலக்கு நிர்ணயி த்தால் தான் அதை அடைய எடுக்கப்படும் முயற்சிகளில் ஒரு வேகம் இருக்கும். அந்த வகையில் முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் பதவியேற்றவுடனேயே 2030ம் ஆண்டில் தமிழ்நாட்டு பொருளாதாரத்தை ரூ.75 லட்சம் கோடி யாக்குவதே தனது இலக்கு, குறிக்கோள், லட்சியம் என்று பிரகட னப்படுத்தினார். இந்தாண்டு தமிழ்நாட்டின் பொருளாதாரம் ரூ.23.5 லட்சம் கோடியாக இருக்கும். இது 2030ம் ஆண்டுக்குள் ரூ.75 லட்சம் கோடியாக வேண்டுமென்றால், இன்னும் 3 மடங்கு வளர்ச்சியைக் காண வேண்டும். அதை அடைய தொழில் வளம், வேலைவாய்ப்புகள் பெருக வேண்டும், உற்பத்தி அதிகரிக்க வேண்டும்.

எனவே அவர், ஆட்சி பொறுப்பை ஏற்றவுடனேயே தொழில் வளர்ச்சி பெருக, புதிய தொழில் முதலீடுகளை ஈர்க்க திட்டமிட்டு பல முயற்சிகளை முனைப்புடன் எடுத்துக்கொண்டார். தமிழ்நாட்டு தொழில் அதிபர்கள், பிற மாநில தொழில் அதிபர்கள், வெளிநாட்டு நிறுவன தொழில் முதலீடுகள் என்று அவர் எடுத்துக் கொண்ட முயற்சியின் விளைவாக கடந்த இரு ஆண்டுகளில் ரூ.2 லட்சத்து 95 ஆயிரத்து 339 கோடி முதலீடுகளை ஈர்க்கும் வகையில் 226 திட்டங்களுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்திடப்பட்டுள்ளன. கடந்த மார்ச் மாதம் அவரது துபாய் பயணத்தின்போது ரூ.6 ஆயிரத்து 100 கோடி முதலீடுகளை ஈர்க்கும் 6 நிறுவனங்களோடு புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப்பட்டது. அதில் சில திட்டப்பணிகள் தொடங்கி விட்டன. வெளிநாட்டு பயணத்துக்கு முன்னதாக ஜப்பான், சிங்கப்பூர் நாடுகளில் உள்ள ‘மிட்சுபிஷி’ நிறுவனம் சார்பில் ரூ.1,891 கோடி முதலீட்டில் திருவள்ளூர் மாவட்டம் பெருவயல் கிராமத்தில் ஆலை அமைக்க முதல்அமைச்சர் மு.க.ஸ்டாலின் முன்னிலை யில் ஒப்பந்தம் செய்யப்பட்டது. இப்போது சிங்கப்பூர் சென்ற அடுத்த நாளே முன்னணி நிறுவனங்களின் தலைமை பொறுப்பில் உள்ளவர்களுடன் தனித்தனியாக சந்திப்பை மேற்கொண்ட அவர், அடுத்த ஆண்டு சென்னையில் நடக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் கலந்துகொள்ள அழைப்பு விடுத்தார். அங்குள்ள மந்திரிகளையும் சந்தித்தார்.

5 நிறுவனங்களுடன் தமிழ்நாட்டில் தொழில் தொடங்க ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. ஒரு நிறுவனம் ரூ.312 கோடி முதலீட்டுக்கு புரிந்து ணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டது. அடுத்து ஜப்பான் நாட்டில் ஒசாகா நகருக்கும், டோக்கியோ மாநகருக்கும் சென்று தொழில் அதிபர்களை தனித்தனியாகவும், கலந்துரையாடலாகவும் கொண்ட கூட்டங்களை நடத்தி சென்னையில் அடுத்த ஆண்டு நடக்கும் முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்தார். ஒசாகாவில் இருந்து டோக்கியோவுக்கு ‘புல்லட்’ ரெயிலில் பயணம் செய்தார்.

ஜப்பானில் மட்டும் 7 நிறுவனங்களோடு ரூ.1,029 கோடியே 90 லட்சத்துக்கான புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின. குறிப்பாக ரத்தஅழுத்த மானிட்டர் போன்ற மருத்துவ உபகரணங்களை தயாரிக்கும் ஒம்ரான் நிறுவனம் இந்தியாவிலேயே முதல் முறையாக தமிழ்நாட்டில்தான் தொழிற்சாலை அமைக்க இருக்கிறது. சிங்கப்பூர், ஜப்பான் சென்றார், வென்றார். “தொழில் வளர்ச்சிக்கு வித்திட்டு, முதலீட்டாளர்கள் மாநாட்டுக்கு அழைப்பு விடுத்து திரும்பி வந்தார்’’ என்ற பெருமைமிகு வாழ்த்துகளை முதல்அமைச்சருக்கு தமிழ்நாடு தெரிவிக்கிறது.

இவ்வாறு ‘தினத்தந்தி’ தலையங்கத்தில் முதல்வ ருக்கு பாராட்டு தெரிவித்துள்ளது.

### சென்னை தெற்கு மாவட்டம் - வேளச்சேரி 174 வட்டம் - மாவட்டப் பிரதிநிதி

# த.செல்வம் இல்லத் திருமண வரவேற்பு விழா! அமைச்சர் மா.சுப்பிரமணியன் தலைமை!

## தமிழச்சி தங்கபாண்டியன் - எஸ்.அரவிந்த்ரமேஷ் - ப.தாயகம்கவி - ஜெ.எம்.எச்.அசன் மௌலானா பங்கேற்பு!

சென்னை, ஜூன். 2

சென்னை தெற்கு மாவட்டம், வேளச்சேரி கிழக்கு பகுதி, 174 வது வட்டம், மாவட்டப் பிரதிநிதி த.செல்வம் செ. சுசீலா ஆகியோரின் புதல்வர் எஸ். வெங்கடேஷிக்கும், சென்னை, கே.என்.ஸ்ரீராம் எஸ்.லதா ஆகியோரின் புதல்வி எஸ்.பத்மாவதிக்கும் திருமண வரவேற்பு விழா இன்று (2.6.2023 வெள்ளிக்கிழமை) மாலை 6 மணிக்கு, சென்னை, நீலாங்கரையில் அமைந்துள்ள புகாரி ப்ளூலகன் திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

திருமண வரவேற்பு மாவட்டக் கழகச் செயலாளரும், அமைச்சருமான மா.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெறுகிறது.

பகுதிச் செயலாளர் துரைகபிலன், வட்டச் செயலாளர் பெ.ராஜி, மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் எம்.விநாயகமூர்த்தி, தலைமை பொதுக்குழு உறுப்பினர்கள் அடையார் பி.ஜெ.பாஸ்கர், ஆர்.பாலசுந்தரம், வார்டு மாமன்ற உறுப்பினர் எம். ராதிகா ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

அடையார் சி.சுரேஷ், ஆ.ச. ஸ்ரீகாந்த், அ.ரவிகிருஷ்ணன், ப.சின்னதம்பி ஆகியோர் வரவேற்புரை ஆற்றுகின்றனர்.



திருமண வரவேற்பு விழாவில் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி, சட்டமன்ற உறுப்பினர்கள் எஸ்.அரவிந்த்ரமேஷ், ப.தாயகம் கவி, ஜெ.எம்.எச். அசன் மௌலானா, மயிலை த.வேலு, துணை மேயர் சி. மகேஷ்குமார், ஏ.எம்.வி.பிரபாகர்ராஜா, பாலவாக்கம் க.சோமு, வேளச்சேரி பி.மணிமாறன், க.தனசேகரன், எஸ். குணசேகரன், பாலவாக்கம் த.விஸ்வநாதன், பாலவாக்கம் மு.மனோகரன், வேளச்சேரி எஸ்.பாஸ்கரன், வாசுகி பாண்டியன், பெ.ரவிசங்கர், டி. துரை, வழக்கறிஞர் ராமசாமி, வழக்கறிஞர் பச்சையப்பன்,

அரிமா சு.சேகர், இரா.துரைராஜ், எம்.கிருஷ்ணமூர்த்தி, வி.இ.மதியழகன், எஸ்.வி.ரவிச்சந்திரன், மந்தைவெளி அ. பாபு, எஸ்.முரளி, மந்தைவெளி அ.அசோக், மந்தைவெளி அ. ஆசை, பி.எல்.தாஸ், ஆர்.பாலு மற்றும் நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

# மயிலை கிழக்கு பகுதி மாணவரணி ஆலோசனை கூட்டம்!

## எஸ்.முரளி பங்கேற்பு!

### ஸ்டோன் வி.அருண்குமார் அறிக்கை!

சென்னை, ஜூன் 02-

மயிலை கிழக்கு பகுதி மாணவரணி சார்பில் இன்று நடைபெறும் ஆலோசனைக் கூட்டத்தில் மயிலை கிழக்கு பகுதிச் செயலாளர் எஸ். முரளி ஆலோசனை வழங்குகிறார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட அமைப்பாளர் எஸ்.சரவணன் மாவட்ட துணை அமைப்பாளர்கள் எம்.கே.பி.மணிமாறன், அருண் ராமஜெயம், அசோகன், ஆர்.பி.எம்.அருண் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

பகுதி துணை அமைப்பாளர்கள் ர.மித்ரன், ஆர் தயாளன், கே.மணிகண்டன், இ.துரை, ஜி .கே .நரசிம்மன், எஸ்.நந்தகுமார், ஆர்.சகாதேவன், ஆர்.அப்பு, தோட்டம் மணி, ஜி.பாரதி, ப.பிரகாஷ் கே.ஐயப்பன், கு.பிரகாஷ், எஸ்.சசிதரன், மாணவர் மணிகண்டன், . ஏ.கோகுல கிருஷ்ணன், ச.பிரேம்குமார், ரா.அஜித் குமார், வழக்கறிஞர் டி.எம்.ஆகாஷ், சுவாதிநாத் . ஆகியோர் வரவேற்கின்றனர்.

நாள் 02:06:2023, இரவு : 6:30 மணியளவில், பகுதி கழக அலுவலகம், சிருங்கேரி மடம் சாலை மந்தைவெளியில் இந் நிகழ்ச்சி நடைபெறுகிறது.

எனவே அனைத்து வட்ட அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் தவறாமல் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பொருள் : தமிழினத்தலைவர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் நூற்றாண்டு தொடக்க விழா நிகழ்ச்சிகள் குறித்து மற்றும் கழக ஆக்கப் பணிகள்

இவ்வாறு மயிலை கிழக்கு பகுதி மாணவரணி அமைப்பாளர் ஸ்டோன் வி அருண்குமார் தெரிவித்துள்ளார்.

# திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

## மதுராந்தகம் சி. ஆறுமுகம்

### ஜூன் 2 (2005)



கழகம் துவங்கிய காலத்திலேயே கழகத்தில் ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் ஆகியோருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பைப் பெற்றவர்.


மதுராந்தகம் ஒன்றியச் செயலாளராகவும், தொடர்ந்து 20 ஆண்டுகள் செங்கற்பட்டு மாவட்டக் கழக செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும் – தி.மு.க. அறக்கட்டளை உறுப்பினர், கழக சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினர் ஆகிய பொறுப்புகளையும் வகித்தவர்.

மூன்று முறை மதுராந்தகம் சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர். குறிப்பாக, 1984ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் 90 பேர் இவரை எதிர்த்து போட்டியிட்ட போதும், கடுமையாக போராடி வெற்றி பெற்றவர்.

1949 முதல் 2005 வரை கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர். மிசா சட்டத்தில் ஒரு வருடம் சிறையில் இருந்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# வரலாற்றை விடுதலை செய்தவர் வாழட்டும் தமிழின் வரலாறாக!




முத்தமிழ் அறிஞர் கலைஞருக்கு
நூற்றாண்டு விழா!
முதலமைச்சராக மு.க.ஸ்டாலின்!

பெரியார் நூற்றாண்டில் (1979)
எம்.ஜி.ஆர் முதலமைச்சர்!
பூவிருந்தவல்லி நெடுஞ்சாலைக்குப்
பெரியார் ஈ.வெ.ரா சாலை என்று
பெயர் மாற்றினார்.
என்ன நினைத்தார்களோ
தெரியவில்லை
ஏப்ரல் 2021 இல்
Grand Western Trunk Road என்று
பெரியார் பெயரை மாற்றினார்கள்.
நினைவில் நிறுத்துங்கள்
மே மாதத் தேர்தலில் ஆட்சி மாறும்
என்றது
தளபதியின் குரல்!

ஆட்சிக்கு வரும் முன்பே
தளபதியின் ஆணையில்
பெரியார் நூற்றாண்டு அடையாள
நினைவு
நிலை பெற்றது!
அறிஞர் அண்ணாவின்
நூற்றாண்டில் (2009)
முதலமைச்சராக முத்தமிழ் அறிஞர்
கலைஞர்!
அண்ணா நூற்றாண்டு நூலகமாக
வரலாற்றில் அண்ணாவை
வாழ வைத்திருக்கிறார்!

இப்போது
கலைஞருக்கு நூற்றாண்டு
முதலமைச்சராக மு.க.ஸ்டாலின்!

சங்கம் வளர்த்த மதுரையில்
சங்கத் தமிழ் படைத்த
கலைஞர் நூற்றாண்டு நூலகம்!

திருவாரூர் தேரில்
திருவள்ளுவரை அமர வைத்து
வள்ளுவர் கோட்டம் எழுப்பியவருக்கு
அஞ்சுகம் அம்மையார் நினைவிட
ஊரில்
கலைஞர் கோட்டம்!

கலைஞர்!
தமிழ் மொழியின் புத்துயிர்ப்பு!
தமிழர்களின் புத்துணர்ச்சி!
பெரியார், அண்ணா கொள்கை
விழுதுகளில் கிளை விரித்து
தமிழர்களுக்கு வெளிச்சம் ஆனவர்!

வணிக நோக்கு இல்லாமல் இயக்கப்
போக்குக்குப்
பாதை போட்டுக் கொண்டே பயணம்
செய்தவர்!
தமிழர்கள் பயணிக்கத் தடம்
காட்டியவர்!
விழுமிய மரபுகளை நவீனம்
ஆக்கியவர்!
கடந்த காலத்தை வெறுமனே கழுவில்
ஏற்றாமல்
நிகழ் காலம் கொண்டு
மதிப்பீடுகளை மாற்றியமைத்தவர்!

நாடகம், திரைப்படம்,
தொலைக்காட்சித் தொடர்
என்று கால மாற்றக் கலை
வெளிப்பாட்டுக்குக்
கை கொடுத்தவர்!
கணினி, இணையம், சமூக ஊடகத்
தொழில் நுட்பங்களோடு கை
கோர்த்தவர்!
1/2 வயதில் “செல்வ சந்திரா' புதினம்
எழுதியவர்!
14 வயதில் திருவாரூர் வீதிகளில்
தமிழ்க் கொடி ஏந்திப் போராடியவர்!
15 வயதில் “மாணவ நேசன்”
பத்திரிகை நடத்தியவர்!
18 வயதில் அண்ணாவின்
திராவிட நாட்டில் “இளமைப்பலி'
எழுதியவர்
18 வயதில் ‘முரசொலி’ மாத இதழ்
தொடங்கியவர்
20 வயதில்
“சாந்தா அல்லது பழனியப்பன்”
நாடகம் எழுதி நடித்தவர்
21 வயதில்
பெரியாரின் குடிஅரசில்
துணையாசிரியர் ஆனவர்!
25 வயதில் திரைத்தமிழைத் திருத்தத்
தொடங்கியவர்!
32 வயதில்

சாக்ரடீசுக்குக் கிரேக்கம் வழங்கிய
தீர்ப்பினைத் திருத்தி “கிரேக்கப்
பெரியார்
நாடகம் போட்டவர்!
92 வயதில் இராமானுஜர் பற்றிய
தொலைக்காட்சித் தொடர் தந்தவர்

“கலைஞர் எழுதுவதுதான் தமிழ்
நாங்கள் எழுதுவதெல்லாம்
தமிழே அல்ல” என்று
தாய்க் காவியம் வெளியீட்டு விழாவில்
ஞானபீட எழுத்தாளர் ஜெயகாந்தனால்
பாராட்டப்பட்டவர்!

“கலைஞரைப் போல் ஒருவர்
அத்தனைப் படைப்புகளையும்
எழுத முயன்றால் அதற்கு
ஒரு பிறவி போதாது” என்று
கலிபோர்னியா பல்கலைக்கழகப்
பேராசிரியர் ஜார்ஜ் ஹார்ட்டால்
புகழப்பட்டவர்!

“நூறு வருடம் கழித்துத்
தமிழ் வரலாற்றைப்
படிக்கிறவன்
இப்படி ஓர் ஆள்
நம்ம ஆள் இருந்தாரா! என்று
நினைக்கக் கூடிய அளவுக்குப்
பேராற்றல் பொருந்திய
பெருமகன் கலைஞர்” என்று
பேராசிரியர்
அ.ச.ஞானசம்பந்தனால்
போற்றப்பட்டவர்!

கலைஞர்!
அகத்தியரும் அடி பதித்த
தேவார மூவராலும் பாடப்பெற்ற
சேக்கிழார் பாடிய
பாரதப் பாண்டவர்கள் மட்டுமன்றிப்
பிரம்மனும் திருமாலும்
நவக்கிரகங்களும்
வழிபட்ட புராணக் கதைகள்
தளும்பும்
திருக்குவளையில் பிறந்தவர்!

சிறந்த வித்துவானும்
கவிதை புனையும் ஆற்றலும்
வடமொழியில் புலமையும்
புராணக் கதைசொல்லியுமான
பெரியவர் முத்துவேலரைத்
தந்தையாகப் பெற்றவர்!

இந்தியா முழுதும் திராவிட மாடலை
எதிர்பார்க்க வைக்கும்
முதல்வர் மு.க.ஸ்டாலினை
மகனாகப் பெற்றவர்!

தன்னைக் தானே செதுக்கிக்கொண்ட
சிற்பியும் சிலையும் ஆனவர்!

நீச மொழி என்று
ஒதுக்கிவைக்கப்பட்ட தமிழைச்
செம்மொழி என்று அறிவிக்கச் செய்து
தமிழ் மொழிக்கு விடுதலை தந்தவர்!

செங்கோல் கொண்டு வரலாற்றைத்
திருத்தாமல்
எழுதுகோல் கொண்டு தமிழ்
வரலாற்றை
விடுதலை செய்தவர்!
ஆம்!
வரலாறு விடுதலை செய்யும் என்று
காத்திராமல்
வரலாற்றை விடுதலை செய்தவர்
வாழட்டும் தமிழின் வரலாறாக!

நன்றி :
“கணையாழி”
3 ஜூன் 2023



ம.ரா.